


தொடர்புக்கு:

**M.பழனிசாமி**
திட்ட ஒருங்கிணைப்பாளர்
மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம்
**தானம் அறக்கட்டளை**
எண்.18, பிள்ளையார் கோவில் தெரு, சோமசுந்தரம் காலனி,
மதுரை - 625 016. தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி எண் 91-452-6210794 / 805
மின் அஞ்சல்: dhanfoundation@dhan.org
இணையதளம்: http://www.dhan.org


# மானாவாரி விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான மக்கள் நிறுவனங்களின் எதிர்காலத் தேடல்



## மதுரை கூடலரங்கம் 2011

செப்டம்பர் 14, 2011

**பின்னணி :**

நமது இந்திய நாட்டின் முதுகெலும்பாக விளங்குவது வேளாண்மை. கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மைத்துறையின் பங்கு குறைந்தாலும், அது உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு ஆதாரமாக விளங்குகின்றது. மேலும் மொத்த விவசாய நிலத்தில், 68 சதவிகிதம் மானாவாரி விவசாயமே நடைபெறுகின்றது. நாட்டின் மொத்த உணவுத் தேவையில் 44 சதவிகிதம் மானாவாரி விவசாயமே பூர்த்தி செய்கின்றது. நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆண்டு முழுவதும் கொண்டாடப்படும் பல விழாக்களும், பண்டிகைகளும், மானாவாரி மக்களின் வாழ்வை ஒட்டியே அமைந்துள்ளன. இத்தகைய சமூக, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மானாவாரி விவசாயத்தினை, அதைச் சார்ந்துள்ள ஏழை விவசாயிகளின், குறிப்பிடத்தகுந்த வாழ்வாதாரமாகவும், வருமானம் பெருக்கக்கூடிய தொழிலாகவும் ஆக்குவதன் மூலம் வறுமையை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன், தானம் அறக்கட்டளை கடந்த பத்தாண்டுகளாக மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது.

இத் திட்டமானது, மானாவாரி விவசாயிகளை ஒருங்கிணைத்து மக்கள் நிறுவனங்களை உருவாக்கி, பல்வேறு நில மற்றும் பயிர் மேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்தி 13,000 குடும்பங்கள் வளர்ச்சியடைய உதவி புரிந்து கொண்டிருக்கிறது. இவ்வளர்ச்சி நிலைத்திடவும்,



திருமங்கலம் உழவர் மாமன்ற அலுவலகம்
செங்கப்படை

மேலும் வளர்ந்திடவும் பொருட்டு, உழவர் மன்றம், உழவர் மாமன்றம், உழவர் வட்டாரச் சங்கம் என பரிணமிக்கும் மக்கள் அமைப்புகள், நீடித்த, நிலைத்த அமைப்புகளாக வளர்ச்சிபெறுவது அவசியம். இந்த நிறுவனங்களின் தூண்களாக விளங்கும் பொறுப்பாளர்களும், பணியாளர்களும் இணைந்து, தங்களது நிறுவனத்தின் எதிர்கால இலட்சியத்தினையும், அதனை அடைவதற்கான வழிகளையும் கூட்டாக நிர்ணயிப்பதன் மூலம் அந்த லட்சியம் நிறைவேறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கின்றது. மக்கள் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள் கூடி நிறுவனத்தின் நேற்றைய நிலை, இன்றைய நிலையை விவாதித்து, எதிர்காலக் கனவு மற்றும் இலக்கை தாங்களே கூடி திட்டமிடும் நிகழ்வே ‘எதிர்கால தேடல்’ ஆகும்.

**நிகழ்ச்சிகள்:**

- இறை வணக்கம்
- வாழ்வாதார மேம்பாட்டுக்கான மக்கள் நிறுவனங்களின் எதிர்காலத் தேடல் குறித்து
- அறிமுக உரை
- சிறுகுழு விவாதம்
  - 2020ல் மானாவாரி விவசாயிகளின் மக்கள் நிறுவனங்கள்
  - அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான செயல் திட்டம்
- சிறுகுழு விவாத தொகுப்பு
- நிறைவுரை

**நிகழ்வுகளின் வெளிப்பாடு:**

பங்கேற்கும் மக்கள் நிறுவனங்களின்

- “2020ல் எங்கள் நிறுவனம்” என்ற ஆவணம்
- அடுத்த இரண்டாண்டுகளுக்கான பணிகள் மற்றும் செயல் திட்டம்

**பங்கேற்பாளர்கள்:**

மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் மதுரை, கிருஷ்ணகிரி மண்டலங்களில் உள்ள மக்கள் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்கள், இதர பொறுப்பாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள்.

**இடம் :** தமுக்கம் மைதானம், மதுரை, தமிழ்நாடு.

**தேதி :** 14 செப்டம்பர் 2011, புதன்கிழமை.




**மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம் - ஓர் அறிமுகம்:**

தானம் அறக்கட்டளையின் ஒரு திட்டமான மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம், “மானாவாரி விவசாயத்தை ஒரு நம்பகமான தொழிலாக மாற்றுவது” என்ற நோக்கத்துடன், 2002ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் நில மேம்பாடு, கால்நடை மேம்பாடு, பயிர் உற்பத்தி பெருக்கம், மண்வள மேம்பாடு, இடர் நிர்வாகம், மானாவாரி விவசாயத்திற்கான நுண்கடன்கள் வழங்குவது போன்ற செயல்பாடுகள் மூலம் மானாவாரி விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தி வருகிறது. தற்பொழுது இந்தியாவில் 6 மாநிலங்களில், 11 மாவட்டங்களில் 13,000 ஏழை எளிய மானாவாரி விவசாயிகளுடன் பணிபுரிந்துவரும் இத்திட்டமானது, மேலும் பல்லாயிரக்கணக்கானோரை மேம்படுத்தும் இலக்குடன் செயல்பட்டு வருகின்றது.